ரீ.கே. ஜயசுந்தர அவர்களினால் கேட்கப்பட்ட வினா

வினாக்கள்

501/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,

(அ) (i) காலி மாவட்டத்தின், ஹினிதும தேர்தல் தொகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட i-road கருத்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டதால், அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு வீதி தொடர்பிலும் எழுந்துள்ள பிரச்சினைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அது தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த ஒவ்வொரு வீதிக்குமாக மதிப்பிடப்பட்ட தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) அந்த வீதிகளை போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் பராமரிப்பதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

அமைச்சு	: போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள்
கேட்டவர்	: ரீ.கே. ஜயசுந்தர
அரசியற் கட்சி	: தேசிய மக்கள் சக்தி